[2020] 3 எஸ்.சி.ஆர். 498

ஊர்மிளா தேவி மற்றும் பலர்

–எதிர்–

கிளை மேலாளர், நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

மற்றும் ஒருவர்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண். 838/2020)

ஜனவரி 30,2020

[மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் திரு. எஸ்.ஏ. பாப்டே,

மாண்புமிகு நீதியரசர் திரு. பிஆர் கவாய்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யா காந்த்]

மோட்டார் வாகனச் சட்டம், 1988 – பிரிவு 173 – மேல்முறையீடு – எதிர் மறுப்புரைகள் – நிலைக்குந்தன்மை – உரிமை கோருபவரின் கணவர்–1 ஆம் மேல்முறையீட்டாளர் (இவர் 2 மற்றும் 4 ஆம் மேல்முறையீட்டாளர்களிரின் தந்தை மற்றும் 5 ஆம் மேல்முறையீட்டாளரின் மகன் ஆவார்) விபத்துக்குள்ளானார் – மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம், உரிமை கோருபவர்களுக்கு ரூ.2,47,500/– வழங்குமாறு காப்பீட்டு நிறுவனத்திற்கு உத்தரவிட்டது – காப்பீட்டு நிறுவனத்தால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு, முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது – அதில் மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மறுப்புரை,

நிலைக்கத்தக்கதல்ல என்று குறிப்பிட்டு தள்ளுபடி செய்யப்பட்டது – முடிவு: 1992–ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளின் விதி 249–ன் படி, உரிமை கோருபவர்கள் எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய உரிமையுடையவர்கள் என உயர்நீதிமன்றம் சரியாகவே தீர்ப்பளித்துள்ளது – இருப்பினும், தற்போதைய வழக்கைப் போல, காப்பீட்டு நிறுவனம் தனது இழப்பீடு வழங்கும் பொறுப்பை மட்டும் எதிர்க்காமல், இழப்பீட்டுத் தொகையின் அளவை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் போது மட்டுமே எதிர் மறுப்புரை தாக்கல் செய்யும் உரிமை உண்டு என அது வரம்பிற்குட்படுத்தியது – பிரிவு 173–ன் படி, தீர்ப்பாயத்தின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட எவரொருவரும், அதன் உட்பிரிவு (2)–க்கு உட்பட்டு, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் – விதி 249(3)–ன் படி, துணை விதிகள் (1) மற்றும் (2)–ல் வழங்கப்பட்டுள்ளவை தவிர, பிரிவு 173–ன் கீழ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளுக்கு, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41 மற்றும் கட்டளை 21 ஆகியவற்றின் விதிகள் தேவையான மாற்றங்களுடன் பொருந்தும் – பிரிவு 173, விதி 249 மற்றும் கட்டளை 41, விதி 22 ஆகியவற்றை இணைத்துப் படிக்கும்போது, எந்தத் தரப்பினரின் மேல்முறையீடு செய்யும் உரிமையிலும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்பது தெளிவாகிறது – தீர்ப்பின் எந்தப் பகுதியாலாவது பாதிக்கப்பட்ட எந்தவொரு தரப்பினரும் மேல்முறையீடு செய்ய உரிமையுடையவர் ஆவர் – அதன்படி, எதிர்மேல்முறையீட்டாளர் தீர்ப்பின் ஒரு பகுதிக்கு எதிராக மேல்முறையீடு செய்யாதிருந்த

போதிலும், அவருக்கு சாதகமாக உள்ள முடிவுகளை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு மூலம் தான் எழுப்பியிருக்கக்கூடிய எந்தவொரு விவகாரத்தையும் எதிர் மறுப்புரையாக முன்வைக்கவும் உரிமையுடையவர் ஆவார் – மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22(4)–ன் படி, முதலேற்பு மேல்முறையீடு திரும்பப் பெறப்பட்டாலோ அல்லது முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டாலோ, எதிர் மறுப்புரையானது எவ்வாறாயினும் விசாரணை செய்யப்பட்டு அதன் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று குறிப்பாகக் குறிப்பிடுகிறது – எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் மேல்முறையீடு முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு, அதை மீண்டும் புதுப்பிக்க அந்த நிறுவனம் ஆர்வம் காட்டவில்லை என்றாலும், மேல்முறையீட்டாளர்களின் எதிர் மறுப்புரையை அதன் தகுதியின் அடிப்படையில் விசாரித்து முடிவெடுக்க வேண்டியது உயர்நீதிமன்றத்தின் கடமையாகும் – எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது – எதிர் மறுப்புரையை அதன் தகுதியின் அடிப்படையில் விசாரித்து முடிவெடுப்பதற்காக, இந்த வழக்கு மீண்டும் உயர்நீதிமன்றத்திற்கு திருப்பியனுப்பி வைக்கப்படுகிறது – உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – கட்டளை 41, விதி 22; கட்டளை 21 – மோட்டார் வாகன விதிகள், 1992 – விதி 249 – இசைவுப் பொதுவர் சட்டம், 1940 – பிரிவு 39.

மேல்முறையீட்டை அனுமதித்த நீதிமன்றம் தீர்மானித்ததாவது:–

1.1. 1992–ஆம் ஆண்டு பீகார் மோட்டார் வாகன விதிகளின் விதி 249–ஐக் கருத்தில் கொண்டு, உரிமை கோருபவர்கள் எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய உரிமையுடையவர்கள் என்ற முடிவிற்கு உயர்நீதிமன்றம் சரியாகவே வந்துள்ளது. இருப்பினும், காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகையின் அளவை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் போது மட்டுமே, எதிர் மறுப்புரை தாக்கல் செய்யும் உரிமை கோருபவர்களின் உரிமையை அது வரம்பிற்குட்படுத்தியது. காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகையின் அளவை எதிர்க்காமல், வாகன ஓட்டுநர் அல்லது உரிமையாளரால் ஒப்பந்த விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன என்ற அடிப்படையில், இழப்பீடு வழங்கும் தனது பொறுப்பை மட்டுமே எதிர்க்கும் போது, உரிமை கோருபவர்கள் தாக்கல் செய்யும் எதிர் மறுப்புரை ஏற்கத்தக்கதல்ல என்று அது தீர்ப்பளித்தது. மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 173–ன் படி, விபத்து இழப்பீடு தீர்ப்பாயத்தின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும், அதன் உட்பிரிவு (2)–ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். பிரிவு 173–ன் உட்பிரிவு (2)–ன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தடையானது, மேல்முறையீட்டில் சர்ச்சைக்குரியத் தொகை பத்தாயிரம் ரூபாய்க்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில், தீர்ப்பாயத்தின் அந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்ய முடியாது என்பது குறித்ததாகும். பீகார் மோட்டார் வாகன விதிகள், 1992–ன் விதி 249–ஐக் கருத்தில் கொண்டு, எதிர் மறுப்புரையின் சட்டப்பூர்வ

ஏற்புத்தன்மை குறித்து எந்தவொரு சிக்கலும் இருக்க முடியாது என்று உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதி அவராகவே கருத்துரைத்துள்ளார். 1992–ஆம் ஆண்டு பீகார் மோட்டார் வாகன விதிகளின், விதி 249–ன் துணை விதி (3), துணை விதிகள் (1) மற்றும் (2)–ல் வழங்கப்பட்டுள்ளவை தவிர, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் முதல் அட்டவணையில் உள்ள கட்டளை 41 மற்றும் கட்டளை 21 ஆகியவற்றுக்கான விதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 173–ன் கீழ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளுக்குத் தேவையான மாற்றங்களுடன் பொருந்தும் என்பதைக் காட்டுகிறது. மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 173, பீகார் மோட்டார் வாகன விதிகளின் விதி 249 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22 ஆகியவற்றை இணைத்துப் படிக்கும்போது, எந்தத் தரப்பினரின் மேல்முறையீடு செய்யும் உரிமையிலும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்பது தெரியவருகிறது.தீர்ப்பின் எந்தவொரு பகுதியாலாவது பாதிக்கப்பட்ட எந்தத் தரப்பினரும் மேல்முறையீடு செய்ய உரிமையுடையவர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. எதிர்மேல்முறையீட்டாளர், தீர்ப்பின் எந்தப் பகுதிக்கும் எதிராக மேல்முறையீடு செய்யாதிருந்த போதிலும், அவருக்கு சாதகமாக உள்ள முடிவுகளை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டின் மூலம் தான் எழுப்பியிருக்கக்கூடிய எந்தவொரு விவகாரத்தையும் எதிர்

மறுப்புரையாக முன்வைக்கவும் உரிமையுடையவர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

1.2. ஒரு மேல்முறையீட்டில், மேல்முறையீடு செய்தவர் தான் பாதிக்கப்பட்ட எந்தவொரு காரணத்திற்காகவும் வாதங்களை முன்வைக்க முடியும் என்கிறபோது, எதிர்தரப்பு தாக்கல் செய்த அதே மேல்முறையீட்டில், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தான் பாதிக்கப்பட்ட தீர்ப்பின் பகுதியை எதிர்த்து எதிர் மறுப்புரை தாக்கல் செய்வதற்கான உரிமை எப்படி மறுக்கப்பட முடியும் என்பதை நீதிமன்றத்தால் புரிந்துகொள்ள இயலவில்லை. உயர் நீதிமன்றம் வகுக்க முயன்ற அந்த வேறுபாடானது, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 173, பீகார் மோட்டார் வாகன விதிகள் 1992–ன் விதி 249 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41, விதி 22 ஆகிய நிபந்தனைகளை ஒன்றிணைத்துப் படிக்கும்போது அதனுடன் ஒத்துப்போகவில்லை என்று உச்ச நீதிமன்றம் கருதுகிறது. உயர் நீதிமன்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் (காப்பீட்டு நிறுவனம்) தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் வேண்டுரை கூறைப் பார்க்கும்போது, அவர்கள் தீர்ப்பாயம் வழங்கிய முழு தீர்ப்பையுமே எதிர்த்துள்ளனர் என்பது தெளிவாகிறது. அதுமட்டுமல்லாமல், இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் (உரிமைக்கோருபவர்கள்), காப்பீட்டு நிறுவனம் தாக்கல் செய்த அந்த மேல்முறையீட்டு வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இத்தகையச் சூழலில், இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் (உரிமைக்கோருபவர்கள்) தாக்கல் செய்த எதிர் மறுப்புரையை, அதன்

தகுதிப்பாட்டின் அடிப்படையில் பரிசீலிக்க மறுத்து உயர் நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22–ன் துணை விதி (4), முதலேற்பு மேல்முறையீடு திரும்பப் பெறப்பட்டாலும் அல்லது தரப்பினர் முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டாலும், மேல்முறையீட்டின் மீது தாக்கல் செய்யப்பட்ட எதிர் மறுப்புரை தள்ளுபடி ஆகாது என்றும், அது முறையாக விசாரணை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படும் என்றும் தெளிவாக வழங்குகிறது. எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் மேல்முறையீடானது தரப்பினர் முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், மேலும் அந்த மேல்முறையீட்டை மீண்டும் புதுப்பிக்கத் தங்களுக்கு விருப்பமில்லை என்று காப்பீட்டு நிறுவனமே தெரிவித்திருந்தாலும், உயர் நீதிமன்றம் இங்குள்ள மேல்முறையீட்டாளர்களின் எதிர் மறுப்புரையை அதன் தகுதிப்பாட்டின் அடிப்படையிலும், சட்டப்படியும் தீர்வு கண்டிருக்க வேண்டும் என்பதே தீர்க்கமான கருத்தாகும்.

1.3. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு இரத்து செய்யப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது. தற்போதைய மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்துள்ள எதிர் மறுப்புரையை, அதன் தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பதற்காக, இந்த வழக்கு மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது.

டெல்லி மாநகராட்சி மற்றும் பலர் –எதிர்– இன்டர்நேஷனல் செக்யூரிட்டி & இன்டலிஜென்ஸ் ஏஜென்சி லிமிடெட் (2004) 3 **எஸ்.சி.சி** 250 : [2003] 1 **எஸ்.சி.ஆர்** 951; பதுர்மல் –எதிர்– பிசாத்துன்னிசா பேகம் (**ஏ.ஐ.ஆர்** 1964 **ஆபி** 365); இனாயத்துல்லா கான் –எதிர்– திவான்சந்த் மகாஜன் (**ஏ.ஐ.ஆர்** 1959 **மபி** 58); ராமஸ்ரே சிங் மற்றும் பலர் –எதிர்– பிபிசன் சின்ஹா (**ஏ.ஐ.ஆர்** 1950 **கல்** 372); பாரு ராம் –எதிர்– பிரசன்னி **ஏ.ஐ.ஆர்** 1959 **எஸ்.சி** 93 : [1959] **எஸ்.சி.ஆர்** 1403; கண்காணிப்புப் பொறியாளர் & பலர் –எதிர்– பி. சுப்பா ரெட்டி (1999) 4 **எஸ்.சி.சி.** 423 : [1999] 2 **எஸ்.சி.ஆர்** 880 – **குறிப்பிடப்பட்டுள்ளது.**

<u>வழக்குச் சட்டக் குறிப்பு</u>

[2003] 1 எஸ்.சி.ஆர் 951	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 16
ஏ.ஐ.ஆர் 1964 ஆபி 365	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 19
ஏ.ஐ.ஆர் 1959 மபி 58	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 19
ஏ.ஐ.ஆர் 1950 கல் 372	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 19
[1959] எஸ்.சி.ஆர் 1403	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 20
[1999] 2 எஸ்.சி.ஆர் 880	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 20

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண்.838 /2020.

பாட்னா உயர்நீதிமன்ற பல்வகை மேல்முறையீடு எண்.521/2011 இல் 21.01.2016 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர்களுக்காக – சிவம் சிங், ரோஹித் குமார் சிங், ஹர்ப்ரீத் சிங் குப்தா, குரு ஷரன் மௌரியா, அனிமேஷ் குமார், சுமித் குமார், ராணா பிரசாந்த், நீரஜ் சேகர்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக – அசோக் குமார் சர்மா, மூத்த வழக்குரைஞர், பர்மானந்த் கவுர், க்ஷிதிஜ் முட்கல், ஏகான்ஷ் பன்சால், அகில் ஷர்மா.

<u>தீர்ப்புரை</u>

நீதிமன்றம் பின்வரும் தீர்ப்புரையை பிறப்பித்தது:

1. அனுமதி வழங்கப்பட்டது

2. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டன.

3. தற்போதைய மேல்முறையீடானது, விபத்தில் பாதிக்கப்பட்ட உரிமைக்கோருபவர் தாக்கல் செய்த எதிர் மறுப்புரை சட்டப்படி விசாரணைக்கு உகந்தது அல்ல என்று 21.01.2016 தேதியன்று பாட்னா உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி பல்வகை மேல்முறையீடு எண் 521/2011–இல் பிறப்பித்த தீர்ப்புரைக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இந்த மேல்முறையீட்டில் முடிவெடுப்பதற்குத் தேவையான மிக முக்கியமான வழக்கின் பொருண்மைகள் பின்வருமாறு:

5. 02.05.2008 அன்று, முதல் மேல்முறையீட்டாளரின் கணவரும், 2 முதல் 4 வரையிலான மேல்முறையீட்டாளர்களின் தந்தையும், 5–வது மேல்முறையீட்டாளரின் மகனுமான சஞ்சய் தாந்தி, லத்பாவிலிருந்து கோராடிஹிற்கு ஒரு டாட்டா மேக்ஸி வாகனத்தில் பயணம் செய்தபோது விபத்தில் சிக்கினார். மேல்முறையீட்டாளர்கள், மோட்டார் வாகனச் சட்டம் 1988–ன் பிரிவு 166–ன் கீழ் (இதில் இதன்பிறகு 'மோ.வா.சட்டம்' என்று குறிப்பிடப்படும்) கோருரிமை மனுவைத் தாக்கல் செய்தனர். வாகனத்தின் உரிமையாளர் முதல் எதிர்வாதியாகவும், வாகனத்தின் ஓட்டுநர் இரண்டாவது எதிர்வாதியாகவும் சேர்க்கப்பட்டனர்; அதேசமயம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (இதில் இதன்பிறகு 'காப்பீட்டு நிறுவனம்' என்று குறிப்பிடப்படும்) மூன்று மற்றும் நான்காவது எதிர்மேல்முறையீட்டாளர்களாகச் சேர்க்கப்பட்டது.

6. வாகனத்தின் ஓட்டுநரும் உரிமையாளரும் காப்பீட்டு ஒப்பந்தத்தின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மீறிவிட்டனர், எனவே நஷ்டஈடு தொகையைச் செலுத்துவதற்குத் தங்களுக்குப் பொறுப்பில்லை என்பதே காப்பீட்டு நிறுவனத்தின் வாதமாகும்.

7. மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரல் தீர்ப்பாயம், 29.01.2011 தேதியிட்ட தீர்ப்பின் மூலம், வாகன ஓட்டுநரும் உரிமையாளரும் விதிமுறைகளை மீறினர் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் வாதத்தை நிராகரித்தது, மேலும், 29.01.2011 தேதியிட்ட

உத்தரவின்படி, உரிமைகோருபவர்களின் கோருரிமை மனுவை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு ரூ. 2,47,500/– நஷ்டஈடாக வழங்குமாறு காப்பீட்டு நிறுவனத்திற்கு உத்தரவிட்டது.

8. கற்றறிந்த தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புரை மற்றும் தீர்வத்தினால் அதிருப்தி அடைந்த காப்பீட்டு நிறுவனம், தங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொறுப்பைத் தீர்ப்பாயம் தவறாக சுமத்திவிட்டது என்று வாதிட்டு, பாட்னா உயர் நீதிமன்றத்தில் பல்வகை மேல்முறையீடு எண். 521/2011–ஐத் தாக்கல் செய்தது. மேற்படி மேல்முறையீட்டில், இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் எதிர் வாதுரையை தாக்கல் செய்தனர். மேல்முறையீடு விசாரணைக்கு வந்தபோது, அலுவலக ஆட்சேபனைகளை சரிசெய்யாத காரணத்தால் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது கவனிக்கப்பட்டது மற்றும் அதில் (காப்பீட்டு நிறுவனம்) மேல்முறையீட்டாளர்களின் வழக்குரைஞர் (காப்பீட்டு நிறுவனம்) மேல்முறையீட்டை புதுப்பிக்க தங்களுக்கு விருப்பமில்லை என்று குறிப்பிட்டார். இதன் விளைவாக, உயர் நீதிமன்றத்தால் மேல்முறையீட்டு வழக்கு முடித்து வைக்கப்பட்டது. இங்குள்ள மேல்முறையீட்டாளர்களின் (உரிமைகோருபவர்கள்) எதிர் மறுப்புரையைப் பொறுத்தவரை, உயர் நீதிமன்றம் 21.01.2016 தேதியிட்ட தீர்ப்பில் கருத்தைக் குறிப்பிட்டது: காப்பீட்டு நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீடு என்பது தங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொறுப்பு இல்லை என்பதை மட்டுமே மையமாகக் கொண்டது; அத்தகைய சூழலில், நஷ்டஈடு தொகையை உயர்த்தக் கோரி உரிமைகோருபவர்கள் தாக்கல் செய்யும் எதிர்

மறுப்புரை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும், காப்பீட்டு நிறுவனம் தனது மேல்முறையீட்டில் நஷ்டஈட்டுத் தொகையை எதிர்த்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22-ன் கீழ் (இதில் இதன்பிறகு 'உ.ந.ச.' என்று குறிப்பிடப்படும்) உரிமைகோருபவர்கள் எதிர் மறுப்புரையை தாக்கல் செய்ய உரிமை உண்டு, ஆனால், இந்த வழக்கில் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு வழங்கும் பொறுப்பை மட்டுமே எதிர்ப்பதால், எதிர் மறுப்புரை சட்டப்படி விசாரணைக்கு உகந்தது அல்ல என்று குறிப்பிட்டு அதைத் தள்ளுபடி செய்தது.

9. பீகார் மோட்டார் வாகன விதிகள், 1992-ன் விதி 249-ஐக் கருத்தில் கொண்டு பாட்னா உயர்நீதிமன்றம், காப்பீட்டு நிறுவனம் தனக்கு வழங்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையை எதிர்த்து, தாக்கல் செய்த மேல்முறையீட்டில் எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய உரிமை கோருபவருக்கு எந்தத் தடையும் இல்லை என்று தீர்ப்பளித்தது. இருப்பினும், உயர் நீதிமன்றம், காப்பீட்டு நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீடு என்பது, வாகன உரிமையாளர் அல்லது ஓட்டுநர் காப்பீட்டு விதிமுறைகளை மீறியதால் தங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொறுப்பு இல்லை என்ற காரணத்திற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அந்தச் சூழலில் உரிமைகோருபவர்கள் தாக்கல் செய்யும் எதிர் மறுப்புரை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. அத்தகைய சூழலில், உரிமைகோருபவர்கள் மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு

173-ன் கீழ் தனியாக ஒரு மேல்முறையீட்டைத் தாக்கல் செய்ய மட்டுமே உரிமை உண்டு என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

10. பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள், சிறப்பு விடுப்பு மனு மூலமாக எங்கள் முன் தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளனர்.

11. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், மேல்முறையீட்டாளர்-காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈட்டுத் தொகையை எதிர்க்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, உரிமைகோருபவர்கள் தாக்கல் செய்த எதிர் மறுப்புரை செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது முற்றிலும் தவறானது என்று சமர்ப்பித்தார்.

12. இதற்கு மாறாக, காப்பீட்டு நிறுவனத்தின் கற்றறிந்த வழக்குரைஞர், இங்குள்ள மேல்முறையீட்டாளர்களின் எதிர் மறுப்புரையை உயர் நீதிமன்றம் நிராகரித்தது சரியானது என்று சமர்ப்பித்தார். மேலும், காப்பீட்டு நிறுவனம் தனது மேல்முறையீட்டு வழக்கை மேற்கொண்டு நடத்தப் போவதில்லை என்று முடிவு செய்ததால், அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மறுப்புரை நிராகரிக்கப்பட்டது சட்டப்படி சரியானது என்று சமர்ப்பிக்கப்பட்டது.

13. தற்போதைய மேல்முறையீட்டிற்குத் தொடர்புடைய மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 173 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22 ஆகிய சட்டப்பிரிவுகள் பின்வருமாறு:

மோட்டார் வாகன சட்டம் பிரிவு 173.

"173. மேல்முறையீடுகள். – (1) (2) ஆவது உட்பிரிவின் காப்புரைகளுக்கு உட்பட்டு, உரிமைகளை முடிவு செய்யும் தனிப்பட்ட வழக்குத் தீர்ப்பு மன்றத்தின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவரொருவர், அந்த தீர்ப்பு தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், உயர்நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

வரம்புரையாக, தீர்ப்பின் விளைவாக பணம் செலுத்த வேண்டிய நபர் ரூபாய் 25,000 அல்லது தீர்ப்புத் தொகையில் பாதி எது குறைவோ செலுத்தினாலன்றி, யாதொரு மேல்முறையீடும் உயர்நீதிமன்றத்தால் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படாது:

மேலும் வரம்புரையாக, அந்த உயர்நீதிமன்றம், முன்சொன்ன காலவரையான தொண்ணூறு நாட்கள் முடிந்த பிறகும், மேல்முறையீடு செய்து கொள்பவர் போதுமான காரணமாக குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு செய்து கொள்வதற்கு அவருக்குத் தடையிருந்தென அந்த உயர்நீதிமன்றம் மனநிறைவு

கொண்டால், அந்த மேல்முறையீட்டை அது பெற்றுக்கொள்ளலாம்.

(2) அந்த உரிமையை முடிவு செய்யும் தனிப்பட்ட வழக்குத் தீர்ப்பு மன்றத்தின் தீர்ப்புக்குட்பட்ட தொகை பத்தாயிரம் ரூபாய்களுக்குக் குறைவாக இருந்தால், அந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்வதற்கில்லை.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22

விதி 22. விசாரணையின் பேரில், எதிராளி அவர் தனி மேல்முறையீடு செய்திருந்தாற்போன்று தீர்ப்பாணையை ஆட்சேபிக்கலாம்.– எதிராளி எவரும், தீர்ப்பாணையின் பகுதி எதன்பேரிலும் மேல்முறையீடு செய்யாதிருந்த போதிலும், அவர் தீர்ப்பாணையை ஆதரிக்கலாம் என்பதோடல்லாமல் பிரச்சனை எது பொறுத்தும் கீழமை நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகச் செய்யப்பட்ட முடிவுரை அவருக்குச் சாதகமாக இருந்திருக்க வேண்டுமென்றும் உரைக்கலாம்; மேலும் அவர் தீர்ப்பாணைக்கெதிராக மேல்முறையீடு மூலமாக எடுத்திருக்கக்கூடிய எதிர் மறுப்புரையை எதையும் எடுக்கலாம். அத்தகைய மறுப்புரையை அவருக்கு அல்லது அவருடைய வழக்குரைஞருக்கு மேல்முறையீடு விசாரணை செய்வதற்காக

நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கான அறிவிப்புச் சார்வு செய்யப்பட்ட மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பாரானால்.

விளக்கம்.– எந்தத் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் தீர்ப்பாணைக்கு அடிப்படையான தீர்ப்பிலுள்ள நீதிமன்ற முடிவு ஒன்றினால் குறையுற்ற ஓர் எதிராளி இந்த விதியின்படி, எந்த அளவுக்குத் தீர்ப்பாணை அந்த முடிவினை அடிப்டையாகக் கொண்டதோ அந்த அளவுக்கு, தீர்ப்பாணையை எதிர் மறுப்புரையைத் தாக்கல் செய்யலாம். உரிமை வழக்கைத் தீர்மானிப்பதற்குப் போதுமானதாயிருக்கிற வேறு எந்த முடிவின்பேரிலும் நீதிமன்றத்தின் தீர்மானம் பொறுத்து இருப்பதன் காரணமாகத் தீர்ப்பாணை முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ எதிராளிக்குச் சாதகமாக உள்ளபோதிலும்

(2) மறுப்புரைக்கான படிவமும் அதன் மீது இயங்கக் கூடிய வகை முறைகளும்.– அத்தகைய எதிர் மறுப்புரை ஒரு விவரக் குறிப்புப் படிவத்தில் இருத்தல் வேண்டும்; மற்றும் 1 ஆவது விதியின் வகைமுறைகள், மேல்முறையீட்டு விவரக் குறிப்பின் படிவம், உள்ளடக்கம் ஆகியவற்றோடு எந்த அளவுக்குத்

தொடர்புள்ளனவோ அந்த அளவுக்கு அதன் மீது இயங்கும்.

(3) ****

(4) எதிராளி எவரும், இந்த விதியின்படி ஓர் மறுப்புரை விவரக் குறிப்பு தாக்கல் செய்திருக்கிற எந்தச் சந்தர்ப்பத்திலும் அசல் மேல்முறையீடு மீளப்பெறப்படுகிறவிடத்து அல்லது தவறுகைக்காகத் தள்ளுபடி செய்கிறவிடத்து, அப்படி இருந்தபோதிலும் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையானது நீதிமன்றம் மற்றத் தரப்பினர்களுக்குத் தான் தக்கதெனக் கருதும் அறிவிப்பினைக் கொடுத்த பின்பு விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஏழ்மையான ஆட்களின் மேல்முறையீடுகள் சம்பந்தமான வகைமுறைகள், எந்த அளவுக்கு இயங்கத்தக்கனவாகச் செய்யப்படக்கூடுமோ அந்த அளவுக்கு, இந்த விதியின்படி செய்யப்பட்ட மறுப்புரை மீது இயங்கும்."

14. பீகார் மோட்டார் வாகன விதிகள், 1992 இன் விதி 249 பின்வருமாறு:

"249. **மேல்முறையீடு செய்யும் முறை. –** (1) உரிமைக்கோரல் தீர்ப்பாயத்திற்கு எதிரான ஒவ்வொரு மேல்முறையீடும், குறிப்பாணை வடிவில் இருக்க வேண்டும், அதில் மேல்முறையீட்டாளர் அல்லது

அவரால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட உயர் நீதிமன்ற வழக்குரைஞர் அல்லது சட்டமுறை அதிகாரி கையொப்பமிட்டு, உயர் நீதிமன்றத்திலோ அல்லது இதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியிடமோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறிப்பாணையுடன், தீர்ப்பாயத்தின் தீர்ப்பு நகல் இணைக்கப்பட வேண்டும்.

(2) குறிப்பாணையில், எந்தவொரு வாதமோ அல்லது விளக்கமோ இல்லாமல், மேல்முறையீடு செய்யப்படும் தீர்ப்புக்கெதிரான மறுப்புரைகளை மிகச் சுருக்கமாகவும், தெளிவான தலைப்புகளின் கீழும் விவரிக்க வேண்டும், மேலும் அத்தகைய காரணங்கள் வரிசையாக எண்களிடப்பட்டு இருக்க வேண்டும்.

(3) துணை விதிகள் (1) மற்றும் (2)–ல் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைத் தவிர்த்து, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41 மற்றும் கட்டளை 21 ஆகிய விதிகளில் உள்ள அம்சங்கள், மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 173–ன் கீழ் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளுக்கும் அப்படியே பொருந்தும்."

15. மேற்கூறிய சட்ட வகையங்களின் அடிப்படையில், உரிமை கோருபவர்கள் எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய உரிமையுடையவர்கள் என்ற முடிவிற்கு உயர்நீதிமன்றம் சரியாகவே வந்துள்ளது. இருப்பினும், பாட்னா உயர்நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளை

அடிப்படையாகக் கொண்டு, காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகையின் அளவை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் போது மட்டுமே, உரிமை கோருபவர்கள் எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய முடியும் என அந்த உரிமையை அது வரம்பிற்குட்படுத்தியது. காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகையின் அளவை எதிர்க்காமல், வாகன ஓட்டுநர் அல்லது உரிமையாளரால் ஒப்பந்த விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன என்ற அடிப்படையில், இழப்பீடு வழங்கும் தனது பொறுப்பை மட்டுமே எதிர்க்கும் போது, உரிமை கோருபவர்கள் தாக்கல் செய்யும் எதிர் மறுப்புரை ஏற்கத்தக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

16. 1940–ஆம் ஆண்டு இசைவுப் பொதுவர் சட்டத்தின் பிரிவு 39–ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டில், எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய உரிமை உள்ளதா? அப்படி உரிமை இருக்கும் பட்சத்தில், எந்த மேல்முறையீட்டை ஆதாரமாகக் கொண்டு எதிர் மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டதோ, அந்த முதலேற்பு மேல்முறையீடே நிலக்கத்தக்கதல்ல என்று தள்ளுபடி செய்யப்பட்டாலும், எதிர் மறுப்புரையை அதன் தகுதியின் அடிப்படையில் விசாரித்து முடிவெடுக்க வேண்டுமா? என்று டெல்லி மாநகராட்சி மற்றும் பலர் – எதிர்– இன்டர்நேஷனல் செக்யூரிட்டி & இன்டலிஜென்ஸ் ஏஜென்சி லிமிடெட் (2004) 3 எஸ்.சி.சி. 250 என்ற வழக்கின் மூலம், இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பாக ஒரு சட்டச் சிக்கல் எழுந்தது.

17. மேற்படி தீப்புரையின் மூலம் இந்நீதிமன்றம் கருத்துரைத்தது பின்வருமாறு :–

> "**14**. மேல்முறையீடு செய்யும் உரிமை என்பது சட்டத்தினால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். மேல்முறையீடு செய்வதற்கு இயல்பான உரிமை என்று எதுவுமில்லை. சட்டம், மேல்முறையீடு செய்பவருக்கு அதற்கான உரிமையையும், நீதிமன்றத்திற்கு அதை விசாரிப்பதற்கான அதிகாரத்தையும் வழங்காதவரை, எந்தவொரு மேல்முறையீட்டையும் தாக்கல் செய்யவோ, விசாரிக்கவோ அல்லது அதன் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கவோ முடியாது. இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைப் பொறுத்தவரை, பிரிவு 39–ன் உட்பிரிவு (1)–ல் உள்ள (i) முதல் (vi) வரையிலான விதிகளில் விவரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வகைக்குள் வரும் உத்தரவுகளுக்கு எதிராக மட்டுமே மேல்முறையீடு செய்யும் உரிமையை பிரிவு 39 வழங்குகிறது. பிரிவு 39, உட்பிரிவு (1)–ன் உரையில் 'வேறு எதிலிருந்தும் இல்லை' என்ற சொற்றொடரைச் சேர்த்ததன் மூலம், மேலே கூறப்பட்ட (i) முதல் (vi) வரையிலான உட்பிரிவுகளுக்குள் வராத, இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட வேறு எந்த உத்தரவுக்கும் எதிராக மேல்முறையீடு செய்யப்படுவதை நாடாளுமன்றம் குறிப்பாகத் தவிர்த்துள்ளது. பிரிவு 41–ன்

கூறு (அ), உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–ல் உள்ள அனைத்து விதிகளின் பொருந்தும் தன்மையை, (i) இந்தச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் முன் நடைபெறும் அனைத்து நடைமுறைகளுக்கும், மற்றும் (ii) இந்தச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் அனைத்து மேல்முறையீடுகளுக்கும் நீட்டிக்கிறது. இருப்பினும், இந்தச் சட்டத்தின் விதிகளுக்கோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கோ முரணாக இருக்கும் பட்சத்தில், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் அந்த விதிகள் பொருந்தாது. இந்தப் பிரிவுகளை மேலோட்டமாகப் படித்தாலே, பிரிவு 39–ன் கீழ் தாக்கல் செய்யப்படும் அனைத்து மேல்முறையீடுகளுக்கும், 1908–ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் விதிகள் பொருந்தும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41 மற்றும் அதன் விதி 22–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள எதிர் மறுப்புரை தெரிவிக்கும் உரிமையை, இசைவுப் பொதுவர் சட்டத்தின் பிரிவு 39–ன் கீழ் செய்யப்படும் மேல்முறையீடுகளுக்கும் நீட்டிப்பதாக அமையும்.

15. எதிர் மறுப்புரை தாக்கல் செய்யும் உரிமையானது, மேல்முறையீடு செய்யும் உரிமையின் தன்மையைக் கொண்டதாகும். எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பாணை அல்லது உத்தரவின் ஒரு பகுதி ஒரு தரப்பினருக்குச் சாதகமாகவும், மற்றொரு பகுதி மறுதரப்பினருக்குச் சாதகமாகவும் இருக்கும்போது, ஒரு தரப்பினர் வழக்கை இத்துடன் முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்தில், தங்களுக்குக் கிடைத்த பகுதி அளவிலான வெற்றியுடன் திருப்தியடைந்து அமைதியாக இருக்கலாம். இருப்பினும், மறுதரப்பினர் பகையை மறந்து சமாதானமாகப் போக விரும்பாமல், மேல்முறையீட்டு மன்றத்தின் முன் வழக்கைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் அந்த சட்டப் போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க முயல்கிறார் என்று தெரிய வரும்போது, அமைதியாக இருந்த தரப்பினர் தனது மேல்முறையீட்டு உரிமையைப் பயன்படுத்த விரும்பலாம். அத்தகைய சூழ்நிலைகளில், அவரும் எதிர் மறுப்புரையை தாக்கல் செய்வதன் மூலம் மேல்முறையீடு செய்யும் தனது உரிமையைப் பயன்படுத்தக்கூடும். எனவே, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பாணை அல்லது உத்தரவுக்கு எதிராக எதிர் மறுப்புரை தாக்கல் செய்வது என்பது, மேல்முறையீடு செய்யும் உரிமையைப் பயன்படுத்துவதே ஆகும்; அந்த உரிமை எதிர் மறுப்புரை என்ற வடிவில்

பயன்படுத்தப்படுகிறது என்பது மட்டுமே இதில் உள்ள வித்தியாசம். மேல்முறையீடு செய்யும் உரிமையே அடிப்படையான உரிமை ஆகும்; அதை எதிர் மறுப்புரை என்ற வடிவில் தாக்கல் செய்வது என்பது வெறும் நடைமுறைச் சார்ந்த விஷயமாகும்.

16. மேலே கூறப்பட்ட சட்டக் கோட்பாடுகள், சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகளைப் படித்தாலே மிக எளிதாகப் புலப்படுகின்றன; இருப்பினும், இது தொடர்பாகக் கிடைக்கக்கூடிய சில தீர்ப்புகளையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். பகதுர்மல் – எதிர்– பிசாத்துன்னிசா பேகம் [ஏ.ஐ.ஆர் 1964 ஆபி 365] என்ற வழக்கில், நீதியரசர் ஜெகன்மோகன் ரெட்டி (அவர் அப்போது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது) தலைமையிலான அமர்வு பின்வருமாறு தீர்ப்பளித்தது: 1952–ஆம் ஆண்டு ஹைதராபாத் ஜாகிர்தார் கடன் தீர்வுச் சட்டத்தின் பிரிவு 51–ன் அடிப்படையில், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் விதிகள் பொதுவாகப் பொருந்தும் என்பதால், அந்தச் சட்டத்தின் 47 முதல் 49 வரையிலான பிரிவுகளின் கீழ் செய்யப்படும் மேல்முறையீட்டில் எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய முடியும். மேல்முறையீட்டுக்கான காரணங்கள் மற்றும் நீதிமன்றக் கட்டணம் குறித்த விதிகள் ஹைதராபாத்

சட்டத்தில் பிரத்யேகமாக இயற்றப்பட்டிருந்த காரணத்தினாலேயே, அந்தச் சட்டத்தின் கீழ் வரும் மேல்முறையீடுகளுக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22–ன் பொருந்தும் தன்மை நீக்கப்படவில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இனாயத்துல்லா கான் –எதிர்– திவான்சந்த் மகாஜன் [ஏ.ஐ.ஆர் 1959 எம்.பி 58] என்ற வழக்கில், அன்றைய தலைமை நீதிபதி எம். இதயதுல்லா அவர்கள், 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 116–A–ன் கீழான தேர்தல் மேல்முறையீட்டில், எதிர் மறுப்புரை தாக்கல் செய்வதை உறுதிப்படுத்தினார், ஏனெனில், பிரிவு 116–A–ன் கீழ் மேல்முறையீட்டை விசாரிக்கும் ஒரு உயர்நீதிமன்றமானது, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஒரு உரிமையியல் மேல்முறையீட்டை விசாரிக்கும்போது தனக்குள்ள அதே அதிகாரம், அதிகார வரம்பு மற்றும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதே இதற்குத் தகுந்த காரணமாகும். ராமஸ்ரே சிங் –எதிர்– பிபிஷன் சின்ஹா [ஏ.ஐ.ஆர் 1950 கல் 372] என்ற வழக்கில், தலைமை நீதிபதி ஹாரிஸ் மற்றும் நீதியரசர் பச்சாவத் ஆகியோர் அடங்கிய அமர்வு பின்வருமாறு தீர்ப்பளித்தது: 1940–ஆம் ஆண்டு 'வங்காளப் பணப்பரிமாற்றச் சட்டத்தின்'

பிரிவு 38–ன் கீழ் வழங்கப்பட்ட மேல்முறையீட்டு உரிமையானது, அந்த உத்தரவை ஒரு நீதிமன்றத் தீர்ப்பாணையாக கருதி மேல்முறையீடு செய்ய வழிவகை செய்கிறது, அந்த மேல்முறையீட்டை விசாரிக்கும் அதிகாரம் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள ஒரு உரிமையியல் நீதிமன்றமான மாவட்ட நீதிபதி நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாலும், அந்த மேல்முறையீட்டு நடைமுறையை முறைப்படுத்துவது குறித்து தனிப்பட்ட விதிகள் ஏதும் இல்லாததாலும், எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிர் மறுப்புரை தாக்கல் செய்யும் உரிமை உள்ளது என்பது இதனுள்ளேயே அடங்கியுள்ளது. ஏ.எல்.ஏ. அழகப்ப செட்டியார் –எதிர்– சொக்கலிங்கம் செட்டி [ஏ.ஐ.ஆர் 1919 மெட் 784 : ஐ.எல்.ஆர் 41 மெட் 904 (மு.அ)] என்ற வழக்கில், தலைமை நீதிபதி வாலிஸ் தலைமையிலான சென்னை உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு பின்வருமாறு தீர்ப்பளித்தது: எதிர்தரப்பினர் மேல்முறையீடு செய்வதன் விளைவாகவே, அந்த மேல்முறையீட்டிற்கு எதிராக எதிர் மறுப்புரை தாக்கல் செய்யும் உரிமை எதிர்மனுதாரருக்குக் கிடைக்கிறது, எனவே, 1907–ஆம் ஆண்டு 'மாகாண திவால் சட்டத்தின்' கீழ் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில் எதிர் மறுப்புரைகள்

நிலைக்கதக்கவை; ஏனெனில், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையே தரநிலையான நடைமுறை ஆகும், மேலும் திவால் வழக்குகளில் அதிகாரத்தைப் பயன்படுத்தும் நீதிமன்றங்களுக்கும் அது பொருந்தும்.

17. இதன் கூடுதல் பயனாக, பாரு ராம் –எதிர்– பிரசன்னி [ஏ.ஐ.ஆர் 1959 எஸ்.சி 93] என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள கருத்துரைகளை நாங்கள் இங்கே சுட்டிக்காட்டுகிறோம். 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 116–A, அந்தச் சட்டத்தின் பிரிவு 98 அல்லது 99–ன் கீழ் உயர்நீதிமன்றம் பிறப்பிக்கும் ஒவ்வொரு உத்தரவுக்கும் எதிராக, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படுவதை உறுதி செய்கிறது. பிரிவு 116–C–ன்படி, அத்தகைய ஒவ்வொரு மேல்முறையீடும் உச்சநீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட வேண்டும், அவ்வாறு செய்யும்போது, சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு, ஒரு உயர்நீதிமன்றம் தனது முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பைப் பயன்படுத்திப் பிறப்பித்த இறுதி உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் எந்த நடைமுறை பின்பற்றப்படுமோ, அதே நடைமுறையையே இயன்றவரை உச்சநீதிமன்றம்

பின்பற்ற வேண்டும். உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–ன் அனைத்து விதிகளும் மற்றும் நீதிமன்றத்தின் நடைமுறை விதிகளும், அத்தகைய மேல்முறையீடு தொடர்பாக இயன்றவரை பொருந்தும். இது குறித்து, அன்றைய உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த பி.பி. கஜேந்திரகத்கர் அவர்கள் நீதிமன்றத்தின் சார்பில் கருத்துரைத்தது பின்வருமாறு : (ஏ.ஐ.ஆர் பக்கம் 99, பத்தி 11)

"ஒரு சாதாரண உரிமையியல் மேல்முறையீட்டில், விசாரணை நீதிமன்றம் தனக்குச் சாதகமாக வழங்கிய தீர்ப்பை, அந்த நீதிமன்றம் குறிப்பிட்ட காரணங்களைத் தவிர்த்து பிற காரணங்களைக் கொண்டும் ஆதரிப்பதற்கு எதிர்மேல்முறையீட்டாளருக்கு உரிமை உண்டு என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எதிர்மேல்முறையீட்டாளர் எதிர் மறுப்புரைகளை தாக்கல் செய்ய அனுமதிக்கும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22–ஆனது, கீழமை நீதிமன்றத்தால் தனக்கு எதிராகத் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும், தனக்குச் சாதகமாக வந்த தீர்ப்பை ஆதரிப்பதற்கான எதிர்மேல்முறையீட்டாளரின் உரிமையை அங்கீகரிக்கிறது. தற்போதைய வழக்கில், 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு

செய்திருக்க முடியாது; ஏனெனில், மேல்முறையீட்டாளரின் தேர்தல் செல்லாது என்ற அறிவிப்பைப் பெறுவதில் அவர் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டார், எனவே, வழக்கின் அடிப்படைத் தன்மையையே பாதிக்கக்கூடிய உயர்நீதிமன்றத்தின் மற்றுமொரு முடிவு தவறானது என்று வாதிடுவதன் மூலம், உயர்நீதிமன்றத்தின் இறுதி முடிவை ஆதரிப்பதற்கான வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட வேண்டும். மேலோட்டமாகப் பார்க்கையில், இந்த வாதத்தில் ஏதோ ஒரு வலுவான உண்மை இருப்பதாகத் தோன்றுகிறது;"

இருப்பினும், அந்த மேல்முறையீட்டில் இந்த விவகாரத்தைத் தீர்மானிப்பது அவசியமற்றது எனக் கருதப்பட்டதால், நீதிமன்றம் இது குறித்து எந்தவொரு இறுதி கருத்தையும் தெரிவிக்கவில்லை.

18. எனவே, எதிர் மறுப்புரையை முன்வைப்பது என்பது, சட்டத்தினால் வழங்கப்பட்ட மேல்முறையீடு செய்யும் அடிப்படை உரிமையைச் செயல்படுத்துவதே ஆகும் என்பதில் எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. எதிப்புக்குள்ளான தீப்புரை, தீர்ப்பாணை அல்லது உத்தரவுக்கு எதிராக முன்வைக்கப்படும் எதிர்ப்புக்கான காரணங்கள், அது ஒரு நேரடி மேல்முறையீடாக இருந்தாலும் அல்லது ஒரு எதிர் மறுப்புரையாக

இருந்தாலும் மாறாமல் ஒன்றாகவே இருக்கும். உரிமையைச் செயல்படுத்தும் வடிவம் மற்றும் முறையில் மட்டுமே வித்தியாசம் உள்ளது; அதேபோல், காலவரையறை தொடங்கும் புள்ளியும் மாறுபடுகிறது.

19. கண்காணிப்புப் பொறியாளர் –எதிர்– பி. சுப்பா ரெட்டி [(1999) 4 எஸ்.சி.சி 423] என்ற வழக்கில், இந்த நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு பின்வருமாறு கருத்துரைத்தது (எஸ்.சி.சி பக்கம் 434, பத்தி 24):

> "சட்டத்தின் பிரிவு 39–ன் கீழ் எதிர் மறுப்புரை தாக்கல் செய்வதற்கான உரிமை வழங்கப்படவில்லை என்றால், அதனை அதே சட்டத்தின் பிரிவு 41–க்குள் அடங்கியிருப்பதாகக் கருத முடியாது. எதிர் மறுப்புரை தாக்கல் செய்வது என்பது நடைமுறை சார்ந்த ஒன்று அல்ல. சட்டத்தின் பிரிவு 41, பிரிவு 39–ன் கீழான மேல்முறையீடுகளுக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் நடைமுறைகள் மட்டுமே பொருந்தும் என்பதைத்தான் வெறும் அறிவுறுத்தலாகக் கூறுகிறது. எனவே, எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த எதிர் மறுப்புரை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்பதே எங்களது கருத்தாகும்..."

அத்தகைய கருத்துரைப்பு சரியானது அல்ல; மேலும், அது சில தவறான ஊகங்களின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, எதிர் மறுப்புரையின் வடிவம் என்பது நடைமுறை சார்ந்தது; மேலும், அது ஏற்கனவே சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை மேல்முறையீட்டு உரிமையைச் செயல்படுத்துவதற்கான ஒரு வழிமுறை மட்டுமே ஆகும். இரண்டாவதாக, சட்டத்தின் பிரிவு 41(a)–ன் மூலம், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள நடைமுறைகள் மட்டுமே இசைவுப் பொதுவர் சட்ட நடவடிக்கைகளுக்குப் பொருந்தும் என்பதில்லை; உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–ன் ஒட்டுமொத்த விதிகளும், நீதிமன்றத்தின் முன் உள்ள அனைத்து நடவடிக்கைகளுக்கும் மற்றும் இசைவுப் பொதுவர் சட்டத்தின்கீழ் வரும் அனைத்து மேல்முறையீடுகளுக்கும் பொருந்தும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது. இந்த விதியானது பொதுவானது மற்றும் பரந்த அளவில் பொருந்தக்கூடியது; இதை எக்காரணம் கொண்டும் குறுக்க முடியாது, இதற்கு இருக்கும் ஒரே விதிவிலக்கு என்னவென்றால்: இசைவுப் பொதுவர் சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும், உரிமையியல்

நடைமுறைச் சட்டம் 1908–ன் விதிகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் மட்டுமே சிவில் நடைமுறைச் சட்டத்தின் செயல்பாடு விலக்கப்படும். அதுவும் அந்த முரண்பாடு எந்த அளவிற்கு உள்ளதோ அந்த அளவிற்கு மட்டுமே விலக்கு அளிக்கப்படும். பி. சுப்பா ரெட்டி வழக்கில் [(1999) 4 எஸ்.சி.சி 423] நிர்ணயிக்கப்பட்ட சட்ட விதியோடு நாங்கள் மாறுபடும் அதே வேளையில், அந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சற்றே மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்பதையும் இங்கே சேர்த்துக் கொள்கிறோம். உண்மையில், பி. சுப்பா ரெட்டி வழக்கில் நீதிமன்றத்தின் முன் இருந்த கேள்வி என்னவென்றால்: ஒரு உத்தரவு அந்தச் சட்டத்தின் பிரிவு 39(1)–ன் வரம்பிற்குள் வராதபோதும், அதிகப்படியான வட்டி கோரித் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மறுப்புரை ஏற்கத்தக்கதா என்பதுதான்.

20. எதிர் மறுப்புரை தாக்கல் செய்வதன் மூலம் செயல்படுத்தப்படுவது மேல்முறையீட்டு உரிமையே என்று நாம் முடிவு செய்த பிறகு, அந்த எதிர் மறுப்புரையின் கருப்பொருள் மற்றும் அதில் கோரப்படும் நிவாரணம் ஆகியவையும் பிரிவு 39(1)–ன் தேவைகளுக்கு இணங்கவே இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், விண்ணப்பதாரர் ஒரு

மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதன் மூலம் எத்தகைய நிவாரணத்தைப் பெற முடியுமோ, அதே நிவாரணத்தைப் பிரிவு 39(1)–ன் விதிகளுக்கு உட்பட்டு ஒரு எதிர் மறுப்புரையை தாக்கல் செய்வதன் மூலமாகவும் கோர முடியும். எதிர் மறுப்புரையின் கருப்பொருள், அந்தச் சட்டத்தின் பிரிவு 39(1)–ன் உட்பிரிவுகள் (i) முதல் (vi) வரையிலான எந்தவொரு வகையிலும் வராத ஒரு உத்தரவை எதிர்ப்பதாக இருந்தால், அந்த குறுக்கு ஆட்சேபனை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல."

18. இவ்வாறு, எதிர் மறுப்புரையைத் தாக்கல் செய்யும் உரிமையானது, மேல்முறையீடு செய்யும் உரிமையின் பண்புகளைப் பெற்றுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்துள்ளதை இதன் மூலம் காண முடிகிறது. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பாணை அல்லது உத்தரவு என்பது ஒரு தரப்பிற்கு ஓரளவிற்கும், மற்றொரு தரப்பிற்கு ஓரளவிற்கும் சாதகமாக இருக்கும்போது, அந்த வழக்கிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில், ஒரு தரப்பினர் தங்களுக்குக் கிடைத்த அந்தப் பகுதி வெற்றியுடன் திருப்தி அடைந்து அமைதியாக இருக்கலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மற்ற தரப்பினர் அந்த வழக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தயாராக இல்லை என்பதையும், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கை மீண்டும் தொடர்வதன் மூலம் அந்தப் பிணக்கை உயிர்ப்புடன் வைத்திருக்க முனைகிறார்கள் என்பதையும் அவர் உணரும்போது, அவரும் தனது

மேல்முறையீட்டு உரிமையைப் பயன்படுத்த விரும்பலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சூழல்களிலும் மற்றும் நிலைகளிலும், அவரும் ஒரு எதிர் மறுப்புரையைத் தாக்கல் செய்வதன் மூலம், தனது மேல்முறையீட்டு உரிமையைப் பயன்படுத்தலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பாணை அல்லது உத்தரவின் மீது எதிர் மறுப்புரை தெரிவிப்பது என்பது, உண்மையில் மேல்முறையீட்டு உரிமையைச் செயல்படுத்துவதே ஆகும்; அந்த உரிமை எதிர் மறுப்புரை என்ற வடிவத்தில் பயன்படுத்தப்பட்டாலும், அதன் அடிப்படைத் தன்மை மேல்முறையீடே என்று அடுத்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடு செய்யும் உரிமையே அடிப்படை உரிமையாகும் என்றும், எதிர் மறுப்புரை என்பது அந்த உரிமையைப் பயன்படுத்துகின்ற ஒரு நடைமுறை சார்ந்த விஷயம் மட்டுமே என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

19. மேற்குறிப்பிட்ட முடிவிற்கு வருவதற்கு, இந்த நீதிமன்றம் பகதுர்மல் –எதிர்– பிசாத்துன்னிசா பேகம் (ஏ.ஐ.ஆர் 1964 ஆபி 365) என்ற வழக்கின் தீர்ப்பைச் சார்ந்திருந்தது, அந்த வழக்கில், ஹைதராபாத் ஜாகிர்தார் கடன் தீர்வுச் சட்டம், 1952–ன் பிரிவுகள் 47 முதல் 49–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், ஒரு எதிர் மறுப்புரை சட்டப்படி நிலைக்கத்தக்கதா என்பது குறித்து ஆராயப்பட்டது. மேலும், இனாயத்துல்லா கான் –எதிர்– திவான்சந்த் மகாஜன் (ஏ.ஐ.ஆர் 1959 மபி 58) என்ற வழக்கின் தீர்ப்பையும் நீதிமன்றம் சார்ந்திருந்தது, அந்த வழக்கில், மக்கள் பிரதிநிதித்துவச்

சட்டம், 1951–ன் பிரிவு 116A–ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் தொடர்பான மேல்முறையீட்டில், எதிர் மறுப்புரை சட்டப்படி நிலைக்கத்தக்கது என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும், ராமஸ்ராய் சிங் மற்றும் பலர் –எதிர்– பிபிஷன் சின்ஹா (ஏ.ஐ.ஆர் 1950 கல் 372) என்ற கல்கத்தா உயர் நீதிமன்றத் தீர்ப்பையும் நீதிமன்றம் சார்ந்திருந்தது. அந்த வழக்கில், வங்காளக் கந்துவட்டிதாரர் சட்டம், 1940–ன் பிரிவு 38–ன் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டில், எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிர் மறுப்புரை தாக்கல் செய்ய உரிமை உண்டு என்பது உறுதி செய்யப்பட்டது.

20. மேலும், பாரு ராம் –எதிர்– பிரசன்னி (ஏ.ஐ.ஆர். 1959 எஸ்.சி 93 : 1959 எஸ்.சி.ஆர் 1403) என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் குறிப்பிட்ட சில கருத்துரைகளை தற்போதைய நீதிமன்றம் சார்ந்திருந்தது. கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் பலர் –எதிர்– பி. சுப்பா ரெட்டி [(1999) 4 எஸ்.சி.சி 423] வழக்கில், இந்த நீதிமன்றத்தின் கற்றறிந்த இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு எடுத்த முரணான கருத்தை, இந்த நீதிமன்றம் ஏற்கவில்லை. இருப்பினும், அவ்வாறு தீர்ப்பளிக்கும் போது, இசைவுப் பொதுவர் சட்டம் 1940–ன் பிரிவு 39–ன்கீழ் மேல்முறையீடு செய்யும் உரிமையானது அதன் உட்பிரிவு (1)–ல் உள்ள (i) முதல் (vi) வரையிலான கூறுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளதால், எதிர் மறுப்புரையும் அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டே அமைய வேண்டும் என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எதிர் மறுப்புரையின் கருப்பொருள், இசைவுப் பொதுவர் சட்டம் 1940–ன்

பிரிவு 39 இன் உட்பிரிவு 1 இன் கூறுகள் (i) முதல் (vi) வரைக்குள் அமைந்தால் மட்டுமே அது சட்டப்படி நிலைக்கத்தக்கதாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

21. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41, விதி 22–ன் அனைத்து விதிகளும், அதன் துணை விதி (4) உட்பட, எதிர் மறுப்புரைக்கு முழுமையாகப் பொருந்தும் என்று இந்த நீதிமன்றம் மேலும் கண்டறிந்துள்ளது. முதலேற்பு மேல்முறையீடானது பிரிவு 39(1)–ன் கூறுகள் (i) முதல் (vi) வரையிலான எந்தவொரு வகையிலும் வராத ஒரு உத்தரவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அது தகுதியற்றது அல்லது ஏற்கத்தக்கதல்ல என்று கருதப்படும்; அத்தகைய சூழலில், அந்த மேல்முறையீட்டைச் சார்ந்துள்ள எதிர் மறுப்புரையும் அதே காரணத்திற்காகத் தோற்றுப்போகும், மேலும் அதன் தகுதிப்பாடு குறித்து நீதிமன்றம் விசாரணை செய்யாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வாறு, ஒரு மேல்முறையீடு சட்டப்படி செல்லத்தக்கதாக இருந்தால் மட்டுமே, அதையொட்டி தாக்கல் செய்யப்படும் எதிர் மறுப்புரையும் செல்லத்தக்கதாக இருக்கும் என்பதே இந்த நீதிமன்றத்தின் முடிவாகும் என்பதை இதன் மூலம் காண முடிகிறது.

22. மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 173–ஐப் பரிசீலிக்கும்போது, அந்தப் பிரிவானது மேல்முறையீடு செய்யும் உரிமையை, இசைவுப் பொதுவர் சட்டம் 1940–ன் பிரிவு 39–ல் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதைப் போலக் கட்டுப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. உரிமைக்கோரல் தீர்ப்பாயத்தின் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட எவரொருவரும், அதன் உட்பிரிவு (2)–ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என்று இது வரையறுக்கிறது. பிரிவு 173–ன் உட்பிரிவு (2)–ன்கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடானது, மேல்முறையீட்டில் சர்ச்சைக்குரியத் தொகை பத்தாயிரம் ரூபாய்க்கும் குறைவாக இருந்தால், உரிமைக்கோரல் தீர்ப்பாயத்தின் எந்தவொரு தீர்ப்பிற்கும் எதிராக மேல்முறையீடு செய்ய முடியாது என்பது குறித்ததாகும். இது காலவரையறை குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்பதைத் தனியாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

23. மேலே விவாதிக்கப்பட்டபடி, பீகார் மோட்டார் வாகன விதிகள், 1992–ன் விதி 249–ஐக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, எதிர் மறுப்புரை செல்லத்தக்கதா என்பது குறித்து எவ்விதமான ஐயமும் இருக்க முடியாது என்று உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி கருத்துரைத்துள்ளார். பீகார் மோட்டார் வாகன விதிகள், 1992–ன் விதி 249, துணை விதி (3)–ன்படி– துணை விதிகள் (1) மற்றும் (2)–ல் வழங்கப்பட்டுள்ளவை தவிர–உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் முதல் அட்டவணையில் உள்ள கட்டளை 41 மற்றும் கட்டளை 21 ஆகிய விதிகளின் நிபந்தனைகள், மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு

173–ன் கீழ் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளுக்குத் தேவையான மாற்றங்களுடன் பொருந்தும்.

24. மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 173, பீகார் மோட்டார் வாகன விதிகள் 1992–ன் விதி 249 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41, விதி 22 ஆகிய நிபந்தனைகளை ஒன்றிணைத்துப் படிக்கும்போது, வழக்கில் உள்ள எந்தத் தரப்பினருக்கும் மேல்முறையீடு செய்யும் உரிமையில் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை என்பது தெளிவாகிறது. தீர்ப்பின் எந்தவொரு பகுதியினாலும் பாதிக்கப்பட்ட எந்தவொரு தரப்பினரும், மேல்முறையீடு செய்யத் தகுதி உடையவர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. எதிர்மேல்முறையீட்டாளர் ஒருவர், தீர்ப்பின் எந்தவொரு பகுதிக்கும் எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யாதிருந்த போதிலும், தனக்குச் சாதகமாக உள்ள தீர்ப்பின் அம்சங்களை ஆதரிப்பதுடன், அவர் மேல்முறையீடு தாக்கல் செய்வதன் மூலம் எந்தெந்த ஆட்சேபனைகளை முன்வைத்திருக்க முடியுமோ, அவற்றை ஒரு எதிர் மறுப்புரை வாயிலாக முன்வைக்கவும் அவருக்கு உரிமை உண்டு என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

25. ஒரு மேல்முறையீட்டில், மேல்முறையீடு செய்தவர் தான் பாதிக்கப்பட்ட எந்தவொரு காரணத்திற்காகவும் வாதங்களை முன்வைக்க முடியும் என்கிறபோது, எதிர்தரப்பு தாக்கல் செய்த அதே மேல்முறையீட்டில், எதிர்மேல்முறையீட்டாளர் தான் பாதிக்கப்பட்ட தீர்ப்பின் பகுதியை எதிர்த்து எதிர் மறுப்புரை தாக்கல் செய்வதற்கான உரிமை எப்படி மறுக்கப்பட முடியும் என்பதை எங்களால்

புரிந்துகொள்ள இயலவில்லை. உயர் நீதிமன்றம் வகுக்க முயன்ற அந்த வேறுபாடானது, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 173, பீகார் மோட்டார் வாகன விதிகள் 1992–ன் விதி 249 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41, விதி 22 ஆகிய நிபந்தனைகளை ஒன்றிணைத்துப் படிக்கும்போது அதனுடன் ஒத்துப்போகவில்லை என்று நாங்கள் கண்டறிகிறோம்.

26. உண்மையில் சொல்லப்போனால், இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்கள் (காப்பீட்டு நிறுவனம்) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் வேண்டுரை கூறைப் பார்க்கும்போது, எதிர்மேல்முறையீட்டாளர்கள்– காப்பீட்டு நிறுவனம் தீர்ப்பாயம் வழங்கிய முழு தீர்ப்பையுமே எதிர்த்துள்ளனர் என்பது தெளிவாகிறது. அதுமட்டுமல்லாமல், இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் (உரிமைக்கோருபவர்கள்), காப்பீட்டு நிறுவனம் தாக்கல் செய்த மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இத்தகையச் சூழலில், இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் (உரிமைக்கோருபவர்கள்) தாக்கல் செய்த எதிர் மறுப்புரையை, அதன் தகுதிப்பாட்டின் அடிப்படையில் பரிசீலிக்க மறுத்து உயர் நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது.

27. இதற்கு மற்றுமொரு கோணமும் உள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 41, விதி 22–ன் உள்விதி (4), முதலேற்பு மேல்முறையீடு திரும்பப் பெறப்பட்டாலும் அல்லது தரப்பினர் முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டாலும், மேல்முறையீட்டின் மீது தாக்கல் செய்யப்பட்ட எதிர் மறுப்புரை தள்ளுபடி ஆகாது என்றும், அது முறையாக விசாரணை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படும் என்றும் தெளிவாக வழங்குகிறது. எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் மேல்முறையீடானது தரப்பினர் முன்னிலையாகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், மேலும் மேல்முறையீட்டை மீண்டும் புதுப்பிக்கத் தங்களுக்கு விருப்பமில்லை என்று காப்பீட்டு நிறுவனமே தெரிவித்திருந்தாலும், உயர் நீதிமன்றம் இங்குள்ள மேல்முறையீட்டாளர்களின் எதிர் மறுப்புரையை அதன் தகுதிப்பாட்டின் அடிப்படையிலும், சட்டப்படியும் தீர்வு கண்டிருக்க வேண்டும் என்பதே எங்களது தீர்க்கமான கருத்தாகும்.

28. முடிவாக, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. 21.01.2016 தேதியன்று, இங்குள்ள மேல்முறையீட்டாளர்களின் எதிர் மறுப்புரை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு இரத்து செய்யப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகிறது. தற்போதைய மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்துள்ள எதிர் மறுப்புரையை, அதன் தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பதற்காக, இந்த வழக்கு மீண்டும் உயர்

நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்புமாறு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்த உத்தரவேதுமில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."